**C.C No. 81/2016**

**PW - 6 கலைசெல்வி க/பெ. ஜெயக்குமார்** **06.02.2026**

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன், அந்த காலகட்டத்தில் மேலூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக எந்த காலத்திலிருந்து எந்த காலம் வரை இருந்தேன் என்றால் 07.12.2015 முதல் அக்டோபர் 2017 ம் தேதி வரை இருந்தேன். எந்த தேதியில் புகார் மனு நான் பெற்றேன் என்றால் 01.01.2016 ம் தேதி புகார் கொடுக்கப்பட்டது, 02.01.2016 ம் தேதி புகாரை நான் பெற்றேன். முதல் தகவல் அறிக்கை காலம் 3 ல் புகார் பெறப்பட்ட நேரம் 02.01.2016 என்று உள்ளது என்றால் சரிதான். சொத்து சார்ந்த பிரச்சனைகளை வருவாய்துறை ஆவணங்களை பார்த்தால்தான் விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்து சம்மந்தமான வழக்கு என்றால் இல்லை, நிலத்திற்குள் அத்துமீறி நுழைந்ததற்கான வழக்காகும். சர்வே எண் 354/10 தொடர்பான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண் 353B ல் எதிரியின் வீடு உள்ளது என்று தெரிந்துகொண்டேனா என்றால் ஆம். அந்த வீட்டில் எதிரி குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை. சர்வே எண் 354/10 ஜமாலியா முகமது முக்ரீம் என்பவரின் பெயரில் உள்ளது என்றால் ஜமாலியா முகமது முக்ரீம் என்பவர் பெயரில் பவர் பத்திரம் மட்டும் உள்ளது. அவரை இவ்வழக்கில் நான் விசாரித்து நான் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

2) இவ்வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் அல்லது தலையாரியை விசாரித்து சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடம் சென்று, இடத்தின் உரிமையாளரை விசாரித்துள்ளேன், ஆனால் விசாரிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 யை எங்கு வைத்து, எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து, 02.01.2016 ம் தேதி விசாரித்தேன். அசா2 கமால் மைதீன் எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 02.01.2016 ம் தேதி காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். இவ்வழக்கின் மற்ற பட்டியல் சாட்சிகளை எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 02.01.2016 ம் தேதி காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 3 கிமீ. 10

நிமிடத்திலிருநது 15 நிமிடத்திற்குள் சென்றுவிடலாம்.

3) அசா1 எனது விசாரணையில் எதிரி கொட்டகை போட வைத்திருந்த கடப்பாறை, அருவாள், ஆகியவற்றை காட்டி ஒடி போய்விடு இல்லை என்றால் கொன்றுவிடுவேன் மிரட்டியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது போலீசார் விசாரணையில் இரண்டு வாகனத்தில் சென்றிருந்தோம், ஒரு வாகனத்தை சம்பவ இடத்தில் விட்டுவிட்டு ஒடி விட்டோம் என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அசா1 யை எத்தனை முறை விசாரித்தேன் என்றால் ஒரு முறை. அசா1 யை இரண்டு முறை விசாரித்ததாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் எத்தனை குற்ற பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கைதான் தாக்கல் செய்துள்ளேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் கொட்டகை கீற்று மேய வைத்திருந்த கட்டையை காட்டி உள்ளே வந்தால் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாக உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லாமல் உண்மைக்கு புறம்பாக சம்பவ இடம் செல்லாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 22.12.2015 ம் தேதி எதிரி மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து, அது சம்மந்தமாக நான் விசாரணை செய்தேன் என்றால் இல்லை. எதிரி அவ்வாறு புகார் கொடுத்தார், அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, சம்பவத்தன்று எதிரி தன்னை தாக்கியதாக புகார் கொடுத்துள்ளார், ஆனால் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி புகார் கொடுத்தார் அவரது புகாருக்கு சரிவர விசாரணை செய்யாமல், புகார்தாரரின் உறவினரின் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிமீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.